விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 21 சனிக்கிழமை (07.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 283

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# கிழக்குப் பிரதேசத்தில் இராணுவம்-புலிகளுக்கிடையே தரையிலும் கடலிலும் கடும் மோதல்

## சேதவிபரம் குறித்து மாறுபட்ட தகவல்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடலிலும் தரையிலும் நேற்று கடும் மோதல்கள் இடம் பெற்றன. பனிச்சங்கேணி ,வாகரையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியும் இணையும் இடத்தில் இம் மோதல் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு கதிரவெளி கடற்பரப்பிலும் கடற்சமர் இடம் பெற்றுள்ளது. இத்தாக்குதலின்போது இடம் பெற்ற சேத விபரம் குறித்து இரு தரப்பினரும் மாறுபட்ட தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளினால் நோர்வேக்கு அவசர கடிதம்

(கிளிநொச்சி)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கவுள்ள நிலையில் கிழக்கில் ஏற்பட்டுள்ள தாக்குதல் சம்பவங்கள் குறித்து நோர்வேக்கு விடுதலைப்புலிகள் அவசர கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

நேற்றைய விடுதலைப்புலிகளின் பாதுகாப்புச் சபையினர் கூடி மேற்கொண்ட தீர்மானங்கள் குறித்து விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அக்கடி தத்தில் தெரியப்படுத்தியுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரை வெளியேற்றுவதற்கு விடுதலைப் புலிகள் மீது இராணுவம் குற்றஞ்சாட்டுவதை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்க வேண்டுமென அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்கவுள்ள நிலையில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறித்து விடுதலைப்புலிகள் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## மட்டக்களப்பில் விமானத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கதிரவெளிப்பகுதியில் விடுதலைப்புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டதாக தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை மூதூர் உப்பாறு இறால்குழிப்பிரதேசங்களை நோக்கி பீரங்கி மற்றும் பல் குழல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. எனினும் விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர். (ஏ)

## மண்டைதீவு எண்ணெய்க் களஞ்சியம் இராணுவத் தாக்குதலில் தீப்பற்றியது

### இராணுவப் பேச்சாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவிலுள்ள விடுதலைப்புலிகளின் இரகசிய எண்ணெய்க் களஞ்சியத்தை படையினர் தாக்கியதில் அது பற்றி எரிந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று முற்பகல் குருநகரில் உள்ள இராணுவ நிலைகள் மீது மண்டைதீவு ,பாலைதீவு ஆகியவற்றுக்கிடையாக ஆறு படகுகளில் வந்த கடற்புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு பதில் தாக்குதலாக கடற்புலிகள் மீது படையினர் பல்குழல் ,ஆட்லறித்தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் இதன்போது கடற்புலிகளின் படகுகள் சேதமடைந்ததாகவும் தெரிவித்த அவர் மண்டைதீவிலுள்ள விடுதலைப்புலிகளின் இரகசிய எண்ணெய்க் களஞ்சியமும் தீப்பற்றி எரிந்ததாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (எ-1)

## மீள் திருத்தத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர் தரப்பரீட்சை 2006 ஆம் ஆண்டின் பெறுபேறுகளில் மாணவர்கள் தமது பெறுபேற்றை மீள் திருத்தம் செய்ய விரும்பின் இம் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பரீட்சைத்திணைக்களம் கேட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப்பரீட்சை முடிவுகள் நேற்று இணையத்தளத்தில் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மன்னார் கடலில் கடும் மோதல்

(கிளிநொச்சி)

மன்னார் கடற்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே நேற்று அதிகாலை கடும் கடற்சமர் நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தலைமன்னார் மற்றும் தீவுப் பகுதிகளுக்கும் இடையேயான கேற்கரைத்தீவு கடற்பிரதேசத்தில் நேற்று அதிகாலை 12.30 மணி முதல் அதிகாலை 2மணிவரை இச் சமர் நடந்துள்ளது.

பாலைத்தீவு ,புங்குடுதீவு மற்றும் இலுப்பைக்கடவை -வேலங்குளம் பகுதிகளுக்குள் நடுவே உள்ள கேற்கரைத்தீவு உள்ள பகுதியிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (எ-)

## இந்தியாவுக்குச் சென்ற பௌயர் அரசியல் தலைவர்களுடன் பேச்சு

(புதுடில்லி)

இலங்கை விவகாரம் குறித்து நோர்வே யின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் இந்தியத் தலைவர்களு டன் கலந்துரையாடியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்து அரசுட னும் விடுதலைப்புலிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்ட அவர் இரு தரப் பினருக்குமிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்தி அது குறித்து விளக்க இந்தியா புறப் பட்டார்.

அங்கு சென்ற அவர் இந்திய வெளியுற வுத்துறை செயலர் சிவசங்கர் மேனன் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார். நேற்று மாலை ஆரம்பமான இக் கலந்துரை யாடல் தொடர்ந்தும் இடம் பெற்றுள்ளது. (ச)

## குடும்பஸ்தர் குத்திக்கொலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தில் கத்திக் குத்துக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்த 3 பிள்ளைகளின் தந்தையான இரட்ணம் மைக்கல் கொலின் (வயது 33) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு வீட்டிலிருந்து வெளியில் சென்றவர் என்றும் இரவு 7.30 மணிக்கே சம்பவம் இடம் பெற்றமை தனக்குத் தெரியவந்ததாகவும் மரண விசாரணையின் போது அவரது மனைவி தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பாதுகாப்புச் சபை அவசரமாக நேற்றுக் கூடியது

(கிளிநொச்சி)

தற்போதைய நிலைமைகள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் பாதுகாப்புச் சபை விவாதிக்கவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரால் தொடர் தாக்குதல் கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இச் சபை கூடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் புதிய வலிந்த தாக்கு தலாக விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதியான பனிச்சங்கேணிக்குள் ஊடுருவியுள் ளனர். முப்படைகளின் தாக்குதல் உதவியு டன் பனிச்சங்கேணிக்குள் 1.5 கிலோமீற்றர் தொலைவு (04 ஆம் பக்கம் பார்க்க)

## உ.த.பரீட்சை முடிவு வெளியாகியது யாழ்.இந்துவில் 10 பேர் '3ஏ' சித்தி

### வேம்படியில் 8 பேருக்கு '3ஏ'

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சை முடிவுகள் நேற்று இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தின் சகல பாடசாலைகளின் முடிவுகளையும் முழுமையாகப் பெறமுடியாத நிலையில் பல பாடசாலைகளின் முடிவுகளை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் இணையத்தளத்தில் பெற்றுள்ளனர்.

யாழ்.இந்துக்கல்லூரியில் பத்து மாணவர்கள் '3 ஏ' சித்திகளையும் , வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 8 மாணவிகள் '3 ஏ' சித்திகளையும், உடுவில் மகளிர் கல்லூரியில் 6 மாணவிகள் '3 ஏ' சித்திகளையும், யாழ். (04 ஆம் பக்கம் பார்க்க)

# நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் இராணுவ வெற்றிக்கு பாதிப்பு ஏற்படாது

## என்ற உத்தரவாதம் கேட்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதன் மூலமாக இராணுவம் பெற்றுள்ள வெற்றிகளுக்கு பாதிப்பு ஏற்படாது என அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று ஜே.வி.பி.கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட மூலம் நீடிப்பின் மீதான விவாதத்தின்போது பேசிய ஜே.வி.பி.நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச இக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

திருகோணமலையைக் கைப்பற்றும் முயற்சியில் சம்பூரிலும் யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் முகமாலையிலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பேச்சுக்களுக்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தொடக்கத்தில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

ஆனால் இப்போது இந்த நிபந்தனைகள் குறித்து ஒரு வார்த்தை பேசுவதில்லை. அண்மைய இராணுவ வெற்றிகளுக்கோ பயங்கரவாதத்தை அழிக்கும் தற்போதைய பரப்புரைகளுக்கோ பேச்சுவார்த்தைகளால் பாதிப்பு ஏற்படாது என்று அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இந்த விடயங்களில் இராணுவத்தினரும் பொதுமக்களும் பாரிய தியாகம் செய்துள்ளனர். ஆகையால் இந்த உத்தரவாதம் தேவைப்படுகிறது.

ஏ-9 பாதையைத் திறக்க வேண்டும் என்று சில சக்திகள் போராட்டம் நடத்துவது என்பது விடுதலைப்புலிகளின் சார்பாகத்தான் என்றார் அவர்.

(எ-1)

## பெற்றோல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நான்காம், ஐந்தாம் திகதிகளில் பெற்றோல் பெற்றுக் கொள்ளாத வாகன உரிமையாளர்களுக்கான பெற்றோல் இன்று வழங்கப்படவுள்ளது.

எரிபொருள் விநியோக அட்டைக்கு வழமைபோன்று 200 ரூபாவுக்கு பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(ச-133)

## யாழ்.லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம்

(சுதுமலை)

கொக்குவில் மேற்கு கேசாவில் பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் இலவச மருத்துவ முகாம் நாளை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்.லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் எல்.டி.ஸ்ரீபன் அறிவித்துள்ளார்.

கொக்குவில் மேற்குப் பகுதி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பொதுமக்களினதும் நலன்விரும்பிகளினதும் வேண்டுகோளுக்கிணங்கவும் அப்பகுதி மாதர் சங்கம் மற்றும் சொண்ட் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்படும் இந்த மருத்துவ முகாமில் உயர் அழுத்தப்பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை மற்றும் பொதுமருத்துவம் என்பனவும் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் வைத்திய கலாநிதியும் மகப்பேற்றியல் வைத்தியரான எஸ். பவானி கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து 'சிறுவர் துஷ்பிரயோகம்' சம்பந்தமான விழிப்புணர்வு கருத்துரையை டாக்டர் எஸ்.பாலசுப்பிரமணியம் நடத்தவுள்ளார்.

கொக்குவில் மேற்குப் பகுதியில் வறுமை கோட்டின் கீழ் வாழும் வசதியற்ற மக்கள் அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி நன்மையடையுமாறு யாழ்.லயன்ஸ் கழகத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ச-252)

## செப்ரெம்பர் மாதத்தில் 79 இராணுவத்தினர் பலி

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மோதல்களில் இராணுவத்தினர் 79 பேர் கொல்லப்பட்டதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு சட்ட மூலத்தை தாக்கல் செய்து அவர் பேசும்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 114 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 79 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 410 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் வலிந்த தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அரச படைகளின் பதில் நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் விடுதலைப்புலிகளின் பலம் உள்ளது. விடுதலைப்புலி சந்தேக நபர்களை கைது செய்யவும் தேடுதல் நடவடிக்கைகளுக்கும் அவசர காலச் சட்டமூலம் வகை செய்யும் என்றார் அவர். (ச-1)

## விசாரணைக்குச் சென்ற பெண் வீடு திரும்பவில்லை என முறையீடு

### வேலணையில் சம்பவம்

வேலணையில் கடற்படை முகாமுக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பெண்ணைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேலணை அம்மன் கோவில் பகுதியில் வசித்து வந்த சந்திரகுமார் கலாராணி(வயது-40) என்ற பெண்ணை விசாரணைக்கு வருமாறு கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் அதன்பின் அவர் வீடு திரும்பவில்லை எனவும் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களாக அவர் குறித்த தகவல் எதுவும் கிடைக்காத நிலையில் யாழ். மனித உரிமை ஆணையகத்தில் முறைப்பாடு செய்ததாகக் கூறப்படுகிறது. (எ-1)

## மினி உலகக் கோப்பை கிரிக்கெட் தகுதிகாண் போட்டி இன்று ஆரம்பம்

மினி உலகக் கிண்ண கிரிக்கெட் தகுதிச் சுற்றுப் போட்டி இன்று இந்தியா மொகாலியில் ஆரம்பமாகின்றது. இதில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன. மினி உலகக் கோப்பைத் தொடரில் இம்முறை நான்கு அணிகள் தகுதிச் சுற்றில் விளையாடுகின்றன.

லீக் சுற்றில் விளையாடும் மற்றைய அணிகள் ஏ மற்றும் பி இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

*அணிகளும் பிரிவுகளும்*

தகுதிச்சுற்று:- இலங்கை , பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் சிம்பாவே.

பிரிவு ஏ :-இந்தியா , அவுஸ்திரேலியா, இங்கிலாந்து தகுதிச்சுற்றில் இரண்டாம் இடம்பெறும் அணி.

பிரிவு பி :- தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், நியூஸ்லாந்து, தகுதிச்சுற்றில் முதலாம் இடம்பெறும் அணி.

### போட்டி அட்டவணை

| திகதி | அணிகள் | இடம் |
|---|---|---|
| தகுதிச்சுற்று | | |
| 7.10.2006 | இலங்கை-பங்களாதேஷ் | மொகாலி |
| 8.10.2006 | மேற்கிந்திய தீவுகள்-சிம்பாவே | ஆமதாபாத் |
| 10.10.2006 | இலங்கை-சிம்பாவே | ஆமதாபாத் |
| 11.10.2006 | பங்களாதேஷ்-மேற்கிந்தியத்தீவுகள் | ஜெய்ப்பூர் |
| 13.10.2006 | சிம்பாவே-பங்களாதேஷ் | ஜெய்ப்பூர் |
| 14.10.2006 | இலங்கை-மேற்கிந்தியத்தீவுகள் | மும்பை |
| லீக்சுற்று | | |
| 15.10.2006 | இந்தியா-இங்கிலாந்து | ஜெய்ப்பூர் |
| 16.10.2006 | நியூஸிலாந்து-தென்னாபிரிக்கா | மும்பை |
| 17.10.2006 | பாகிஸ்தான்-தகுதிச்சுற்று-1 | ஜெய்ப்பூர் |
| 18.10.2006 | அவுஸ்திரேலியா-தகுதிச்சுற்று 2 | மும்பை |
| 20.10.2006 | நியூஸிலாந்து-தகுதிச்சுற்று 1 | மும்பை |
| 21.10.2006 | அவுஸ்திரேலியா-இங்கிலாந்து | ஜெய்ப்பூர் |
| 24.10.2006 | தென்னாபிரிக்கா-தகுதிச்சுற்று 1 | ஆமதாபாத் |
| 25.10.2006 | பாகிஸ்தான்-நியூஸிலாந்து | மொகாலி |
| 26.10.2006 | இந்தியா-தகுதிச்சுற்று 2 | ஆமதாபாத் |
| 27.10.2006 | தென்னாபிரிக்கா-பாகிஸ்தான் | மொகாலி |
| 28.10.2006 | இங்கிலாந்து-தகுதிச்சுற்று 2 | ஆமதாபாத் |
| 29.10.2006 | இந்தியா-அவுஸ்திரேலியா | மொகாலி |
| அரையிறுதி | | |
| 01.11.2006 | பிரிவு ஏ 1-பிரிவு பி 2 | மொகாலி |
| 02.11.2006 | பிரிவு பி 1-பிரிவு ஏ 2 | ஜெய்ப்பூர் |
| இறுதிப்போட்டி | | |
| 05.11.2006 | அரையிறுதியில் வென்றவர்கள் | மும்பை |

அனைத்துப் போட்டிகளும் இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும். (05)

## உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் மாணவன் தேசிய மட்டத்தில் ஒன்பதாவது இடம்

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சையின் முடிபுகளின் படி கணிதப் பிரிவில் கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் முதலிடம் பெற்றுள்ளார்.

நான்காம்இடத்தை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தின் குபராஜன் ரஜீவன் என்ற மாணவன் பெற்றுள்ளார்.

9-வது இடத்தை வல்/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையின் குமாரசாமி கணேஷானந் பெற்றுள்ளார்.

விஞ்ஞானப் பிரிவிலும் வர்த்தகப் பிரிவிலும் முதலிடத்தில் கொழும்பு நாலந்தாக் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளனர்.

கலைப் பிரிவில் முதலிடத்தை கண்டி மகளிர் உயர் கல்லூரி மாணவி பெற்றுள்ளார். எனினும் நாடளாவிய ரீதியில் விஞ்ஞானம், கணி தம், வர்த்தகம் மற்றும் கலைப் பிரிவுகளில் முதல் பத்துத் திறமையான இடத்தை சிங்கள மாணவர்களே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2006 ஆம் ஆண்டின் க.பொ.த.உயர்தரப் பரீட்சை முடிபுகள் நேற்றுக் காலை முதல் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள பாடசாலைகளுக்கு நேற்றுப் பெறுபேறுகள் வழங்கப்பட்ட போதும் ஏனைய பிரதேசங்களுக்கு பெறுபேறுகள்அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் கொலையானவர்களின் உறவினர்கள் கதறல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் நேற்று பொது மக்களின் கண்ணீரில் கரைந்த காட்சி பார்ப்பவர்களின் மனதை உருக்குவதாகக் காணப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது பதிவுகளை மேற்கொண்டனர்.

இதற்காக சுமார் 25ற்கு மேற்பட்டவர்கள் மனித உரிமை அலுவலகத்திற்குச் சென்றிருந்தனர். இதில் கணவன்மார்களை இழந்த இளம் பெண்களும் பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும் எனப் பலரும் அங்கு சென்றனர்.

ஒருவரை ஒருவர் பார்த்து தமது அடக்க முடியாத துன்பத்தை வெளிப்படுத்தி அழுதமை அலுவலகத்தை சோகமயமாக்கியதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

நல்லதைச் செய்ய வேண்டும். நல்லதைச் சொல்ல வேண்டும்: நல்லதை நினைக்க வேண்டும் என்ற இலட்சியத்தில் ஈடுபட்டால் யாவும் நல்லனவாகவே இருக்கும்.
-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# இரு துருவங்கள் இணைவது போருக்கா? சமாதானத்திற்கா?

இலங்கையில் அரசியல் புலத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இரு துருவங்களாகவே இருந்து வந்துள்ளன.

தற்போது அந்த இரு துருவங்களும் பாராளுமன்றத்தில் ஒருமித்து செயற்படுவது என இணக்கம் கண்டுள்ளன.

எதிர்க்கட்சி என்ற வகைமை இல்லாமல் பாராளுமன்றத்தில் ஒன்றித்துச் செயற்படுவதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் கண்டுள்ளமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி என்று கூறவேண்டும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தேசிய அரசு அமைக்கும் முயற்சிகள்பல தடவைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அது வெற்றி காணவில்லை.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதும் பேராசிரியர் பீரிஸுடன் ஆலோசனை நடத்தினார்.

அதில் சமாதானப் பேச்சுவார்த்தையில் பேராசிரியர் பீரிஸின் அனுபவங்களும் அரசியல் நுட்பங்களும் தேவை என்றவாறு ஜனாதிபதியின் கருத்து அமைந்திருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற ரணில் விக்கிரமசிங்க 'இனப்பிரச்சினையில் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு தயாராகவிருக்கின்றோம்' என் அறிவித்தார்.

இதற்கு ஜனாதிபதியாக பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷவின் பதில் தலையிடியாகவிருந்தது. இனப்பிரச்சினை விடயத்தில் யாருடைய ஆலோசனையும் எமக்குத் தேவையில்லை. எமது அரசியல் அனுபவங்களைக் கொண்டு நாம் இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கூறியிருந்தார்.

தேர்தலில் தோற்றுப்போன ஒருவர் நாகரிகமாக நடந்து கொள்ள, வென்றவர் நயத்தக்க நாகரிகம் பேணாமல் நடந்து கொண்டமையும் அன்று விருப்புக்குரியதாக இல்லாவிடினும் அதற்குள்ளும் ஜனாதிபதி மகிந்தவின் ராஜதந்திரம் வேலை செய்தது என்றே கூறவேண்டும்.

அதாவது ஐக்கிய தேசியக் கட்சியை உடைப்பதை இலக்காகக் கொண்டிருந்த மகிந்த, ரணிலை ஓரங்கட்டுவதற்காகவே இனப்பிரச்சினைத் தீர்வில் யாருடைய ஒத்துழைப்பும் தேவையில்லை என்றவாறு கூறியிருந்தார்.

அவ்விதம் கூறிய மகிந்த ஒருசில வாரங்களில் பேராசிரியர் பீரிஸை அழைத்து சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடல் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கமல்ல. மாறாக பேராசிரியர் பீரிஸை தனது கட்சியில் சேர்ப்பதே நோக்காகும்.

இந்த நோக்கம் பீரிஸில் சரிவராது போனாலும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தாவுவதற்கு வழி வகுத்தது.

அதேநேரம் அரசுடன் இணைந்துசெயற்படுவதை பேராசிரியர் பீரிஸ், கட்சித் தலைவர் ரணிலிடம் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

தனது கட்சி உறுப்பினர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தாவுவதைத் தடுப்பதும் பேராசிரியர் பீரிஸின் ஆலோசனைக்கு மதிப்பளிப்பதும் அவசியமாகவிருந்தமையால் ஆளும் கட்சியுடன் ஒருமித்துச் செயற்படும் திட்டத்திற்கு ரணில் சம்மதித்தார்.

இவை இரு துருவங்களின் இணைவு குறித்த குறிப்புகள்.

அவை இரண்டும் இணைந்து கொண்டமை தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கா? அல்லது போருக்கா? என்ற கேள்வி எழுந்தால், இரண்டு கட்சிகளையும் இணைக்கும் முயற்சியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் இனவாதச் சிந்தனையில் மூழ்கியுள்ள பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவே தலைமை வகித்தார் எனின் அந்தக் கூட்டு குண்டு போடுமேயன்றி குந்தியிருந்து பேசாது என்பதே உண்மையாகும்.

# பிரபாகரனின் உத்தரவாதம் இல்லாமல் பேச்சுக்களை அரசு ஆரம்பிக்கக் கூடாது

## ஹெலஉறுமய வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் உத்தரவாதம் இல்லாமல் அரசு பேச்சுக்களை நடத்தக் கூடாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.

ஆயுதங்களை ஒப்படைத்து வன்முறைகளை நிறுத்துவதாகத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் எழுத்து மூலமாக உத்தரவாதம் அளிக்காமல் பேச்சுக்களை மீளத் தொடங்கக் கூடாது.

இத்தகைய உத்தரவாதம் இல்லாமல் பேச்சுக்களை நடத்துமாறு அரசாங்கத்திற்கு நோர்வே அழுத்தம் கொடுத்துள்ளது. நோர்வேயின் அழுத்தங்களுக்கு அரசாங்கம் இணங்கக் கூடாது. நோர்வே எப்பொழுதுமே இரட்டை விளையாட்டுத் தான் விளையாடுகின்றது.

அமைதிப் பேச்சுகளுக்கு என்று குறிப்பிட்ட தெளிவான காலவரையறையை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்றார் எல்லாவல மேதானந்த தேரர்.

இதனிடையே ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க கூறுகையில்,

இந்நாட்டு மக்கள் மீது எந்தவொரு தீர்வையும் திணித்தால் தென்னிலங்கையின் ஜனநாயகம் ஆட்டம் கண்டு விடும் என்று எச்சரித்துள்ளார். (எ-5)

# ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினருடன் தமிழர்கள் சந்திப்பு

(பெல்ஜியம்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரப் பிரதிநிதியும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற சமூக லிபரல் கட்சி உறுப்பினருமாகிய அனர்ஸ் சாமுவேல்சனை டென்மார்க் தமிழர்களின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

பெல்ஜியம் நாட்டில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய வளாகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. டென்மார்க் சமூக லிபரல் கட்சி, தென்பிராந்திய சபைக்கான உப உறுப்பினரும் கலாசார சமாதான அபிவிருத்தி மையத்தின் நிறுவனருமான த.தர்மகுலசிங்கம் தலைமையில் கலாசார-சமாதான அபிவிருத்தி மையத்தின் நிர்வாகத்தினரும் டென்மார்க் தமிழ் அமைப்புக்களின் ஒன்றிய நிர்வாகியும் இச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இலங்கையில் மனிதமும் மனித உரிமைகளும் உரிய முறையில் நிலைபெறவேண்டும். மற்றும் தமிழீழ மக்களின் சமாதான ஜனநாயக வாழ்வுக்கு வழி உருவாக்கப்பட வேண்டும் என்று இச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் படும்இன்னல்கள் விளக்கப்பட்டுள்ளதுடன் கோரிக்கை அடங்கிய அறிக்கையும் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது,

சிறிலங்காவினால் தமிழர் தாயகத்தின்மீது திணிக்கப்பட்டுள்ள யுத்தத்தினையும் படுகொலைகளையும் நிறுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையினை உடனடியாக நடத்த வேண்டும்.

ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தை முடிபுகளை அரசானது உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழ் மக்கள்மீதான படுகொலைகள், மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்காக டென்மார்க் அரசு காலம் தாழ்த்தாது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிலையிலான ஒருவரைத்தெரிவு செய்து இலங்கைக்கு அனுப்ப வேண்டும்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் 2006 resolution ஈழத்து தமிழ் மக்களை அழிப்பதற்கான அனுமதியாகக் கருதி தமிழ் மக்களைப் படுகொலை செய்கின்றனர்.

ஆகவே இந்த அறிக்கையினை மறுபரிசீலனை செய்ய வேண்டும். விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அதில் இடம்பெற்றுள்ளன. (எ-5)

# புலிகளின் பகுதிக்குள் ஊடுருவியிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் இராணுவம் ஊடுருவி இருந் தால் அது ஏற்கமுடி யாதது என்று இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் கூறுகையில்; இரு தரப்பும் பேச்சுக்களுக்கு ஒப்புக்கொண்ட பின் னர் இத்தகைய ஊடுருவல் நடவடிக்கையா னது ஒரு வலிந்த தாக்குதல் நடவடிக்கை யாகும் என்றார்.

வாகரைப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று அதிகாலை வலிந்த தாக்குதலை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் ஊடுருவியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

அமைதிப்பேச்சுக்களுக்கு இணக்கம் தெரிவித்துள்ள நிலையிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை தொடர்ந்தால் சமாதான நடவடிக் கையில் இருந்து விலகுவோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்திருந்த நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது என்றார். (ச)

# முஸ்லிம் சமாதான செயலகத்தில் அமைதிச் சட்டசபைகள் அமைப்பு

(கொழும்பு)

முஸ்லிம் சமாதான செயலகம் சார்பில் மூன்று மாவட்டங்களில் அமைதி சட்டசபைகள் உருவாக்கப்படவுள்ளன. இந்த சபைகளில் மக்களால் தெரிவு செய்யப்படுகிற 15 உறுப்பினர்கள் இடம்பெறுவர்.

அரசியல் கட்சிகள், மத அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் ஆகிய தரப்பின் பிரதிநிதிகள் இதில் இடம்பெறுவர்.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இந்த சபைகள் உருவாக்கப்படும். அமைதி முயற்சிகளிலும் பாதுகாப்பு விடயங்களில் முஸ்லிம்கள் ஐக்கியம் மற்றும் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்த இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பாதுகாப்பு, மீள் குடியேற்றம், இடம் பெயர்வு, முஸ்லிம்களுக்கு எதிரான கிழக்கு வன்முறைகள் ஆகியவை இந்த சபைக் கூட்டங்களில் விவாதிக்கப்படவுள்ளது. (எ)

# தூதரகம் முன் தற்கொலை

நோர்வேத் தூதரகத்தின் முன்னால் தனக்குத்தானே எரியூட்டிக் கொண்ட ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இவர் நேற்று முன்தினம் நோர்வேத் தூதுவரகத்தின் முன்னால் தன்னைத் தானே எரியூட்டிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நோர்வேயை நாட்டிலிருந்து வெளியேற்றக் கோரியே இவர் தனக்குத் தானே எரியூட்டிக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியில் ஈடுபடுவோம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையில் உணவு உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளைப் பெறுவதில் பெரும் சிரமம் எதிர்நோக்கப்படுகின்றது. விவசாய இரசாயனங்களின் தட்டுப்பாடும் அதன் உயர் விலையும் உணவு உற்பத்திக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. இந்நிலையில் உள்ளூரில் கிடைக்கக் கூடிய சேதனப்பசளைகள் சம்பந்தமாக கவனம் செலுத்துதல் காலத்தின் தேவையாகும் என யாழ்.விவசாயப் போதனாசிரியர் சொ.சிவகுமார் அறிவித்துள்ளார்.

எமது சூழலில் இருந்து பெறக்கூடிய சேதனைப் பசளைகள் இப்பிலிப்பில், கிளிசிறிடியா, பூவரசு, வாகை , வேம்பு என்பவற்றின் இலை குழைகளையும் பனை ஓலையையும் மண்ணின் வளத்தைப் பேணுவதற்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

மேலும் பயிர்ச் செய்கைக் காணிகளில் சணலினை விதைத்து 50 வீதம் பூக்கள் தோன்றிய பருவத்தில் வெட்டிப் புதைப்பதன் மூலமும் மண்ணை வளமாக்க முடியும்.

வெற்றுக் காணிகளில் களையாகக் காணப்படும் நைதரசன் நிறைந்த காவிளாயினையும் வளமாக்கியாக பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றுடன் உலர்ந்த சருகுகள், உமி என்பவற்றையும் பயன்படுத்தலாம்.

கோழி,ஆடு, மாடு என்பவற்றின் கழிவுகள் பயிர்ச்செய்கை நிலத்தில் சேர விடுவதன் மூலம் சிறந்த பயனை பெற முடியும். மண் சேதவளமாக்கிகளை நேரடியாக இடுவதைத் தவிர கூட்டெருவாக மாற்றியும் மண்ணில் சேர்த்துவிடலாம்.

ஆகவே கூடிய அளவு சேதனப்பசளைகளை எமது பயிர்ச் செய்கையில் பயன்படுத்தி உணவு உற்பத்தியில் வெற்றிகரமாக ஈடுபடுவோம் என அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ( )

# அரசுடனான முதலாம் சுற்றுப் பேச்சில் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தே ஆராய்வு

## இளந்திரையன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துடனான முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் போர்நிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம்,வன்முறைகளை நிறுத்துதல் ,மக்களின் இயல்புவாழ்க்கையை மீண்டும் ஏற்படுத்துதல் போன்றன தொடர்பாகவே ஆராயப்படும் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது ,சர்வதேச சமூகத்திற்கும் இணைத் தலைமை நாடுகளுக்கும் இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பொன்றை வழங்கியுள்ளோம். நிலைமையைத் தொடர்ந்து அவதானித்துக்கொண்டிருப்போம் .

பேச்சுவார்த்தைக்கான உறுதியான திட்டம் ஏதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இந்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பகட்டமாகவே அமையும். பேச்சுவார்த்தைகளுக்கான திகதிகள் குறித்து நேர்வே எம்முடன் கலந்துரையாடியிருந்தது. நாங்களும் அதற்கு இணக்கம் தெரிவித்தோம் இருப்பினும் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் போர் முன்னெடுப்புக்களை மேற்கொள்வது கவலைக்குரிய விடயமாகும்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம் பெறும் தாக்குதல்கள் குறித்து எம்மால் ஒன்றும் கூறமுடியாது. ஆனால் எல்லைப்பிரதேசங்களில் ஷெல் தாக்குதல்களை நடத்தி அப் பிரதேசங்களில் சண்டைக்கான சூழலை உருவாக்குவது யார் என்பதை



அறிவதற்கு கண்காணிப்புக்குழுவை அனுமதிக்க வேண்டும். நாங்கள் இதற்கு அனுமதி வழங்கியுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–1)

# இராணுவம்–புலிகளுக்கிடையே....

இத் தாக்குதல்களை விடுதலைப்புலிகளே முதலில் நடத்தியதாக இராணுவமும் இராணுவமே முதலில் வலிந்த தாக்குதலை தொடர்ந்ததாக விடுதலைப்புலிகளும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

வெலிக்கந்தை, கஜிவத்தை, சிங்கபுர மற்றும் மாங்கேணி ஆகிய நான்கு முனைகளில் இருந்து இராணுவம் முன்னேறியதாக தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்ததாவது,

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான பனிச்சங்கேணி பிரதேசத்தை ஆக்கிரமிக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரின் முன்னகர்வு முயற்சி முறியடிக்கப்பட்டது.

இச் சமரில் 50 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஐந்து போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

பனிச்சங்கேணி பகுதியை நோக்கி நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4.20 மணியளவில் இராணுவத்தினர் ஒரு தாக்குதல் நடவடிக்கையை தொடங்கினர்.

எங்களின் முன்னரங்கப் பகுதிக்குள் ஊடுருவி தாக்குதலைத் தொடங்கிய அதே நேரத்தில் மட்டக்களப்புகாகித ஆலை இராணுவ முகாமில் இருந்து வாகரைப் பிரதேசம் நோக்கி எறிகணைகள் பல்குழல் பீரங்கிகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன.

இத் தாக்குதலுடன் டாங்கிகள் மற்றும் பவள் கவச வாகனங்கள் சகிதம் ஒரு முன்னேற்ற நகர்வினை இராணுவத்தினர் மேற்கொண்டனர். இதற்கு பதில் நடவடிக்கையை எமது போராளிகள் மேற்கொண்டனர்.

தொடர்ந்து அந்த பிரதேசத்தில் மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்த மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே பிற்பகல் ஒரு மணியளவில் பனிச்சங்கேணிப் பகுதிக்கு வந்த கடற்கலங்களில் இருந்து குவிக்கப்பட்ட கடற்படையினர் அப்பகுதியில் ஒரு தரையிறக்க நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த தரையிறக்க நடவடிக்கையை எமது தமிழீழ கடற்படையினர் முறியடித்தனர். இதனையடுத்து கடற்படையினரின் தரையிறக்க நடவடிக்கையானது பின்வாங்கப்பட்டது. அதன் பின்னர் விமானப்படையின் கிபீர் விமானங்கள் அந்த பகுதிகளில் தொடர்ச்சியாக நான்கு முறை வான் குண்டுத் தாக்குதலை நடத்தின.இத் தாக்குதல் நடவடிக்கை மாலை 5 மணிவரை தொடராக நீடித்தது.

இத் தாக்குதலில் ஐந்து போராளிகள் வீரச்சாவைத்தழுவியுள்ளனர். இத் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்களை நாங்கள் கைப்பற்றியுள்ளோம். மொத்தம் 50 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. காயமடைந்திருந்த இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரை நாங்கள் கைதுசெய்துள்ளோம்.

இது ஒரு மோசமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்று நேற்றுக் காலை 7 மணிக்கு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்டத்தினருக்கு தெரியப்படுத்தினேன்.

இராணுவத்தினரின் இந்த வலிந்த தாக்குதல் தொடங்கிய நிலையில் உடனடியாக மக்களை அங்கிருந்து பாதுகாப்பான பிரதேசங்களுக்கு நகர்த்தினோம். ஆகையால் மக்களுக்கு பாரிய இழப்பு ஏற்படவில்லை. இந்தத் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 5 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தியமையால் மக்களுக்கான இழப்பு குறைக்கப்பட்டது என எழிலன் தெரிவித்தார்.

இதேவேளை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கையில்,

நேற்று அதிகாலை 4மணியளவில் கிழக்கில் உள்ள மாங்கேணி முகாம் மற்றும் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். வாகரைப் பகுதியில் இருந்து பீரங்கி உட்பட கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தினர்.இதனையடுத்து படையினர் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந் நிலையில் பனிச்சங்கேணியில் உள்ள பாலம் உடைக்கப்பட்டுள்ளது. மேலதிக போராளிகளை ஏற்றிவந்த 2 படகுகள் வாகரையில் இருந்த கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டன. இந்நிலையில் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட சேதவிபரம் எத்தகைமையானது எனக்கூற முடியாது.

ஆனால் முன்னரங்க காவல் நிலையத்தில் இருந்த துருப்புக்கள் 20–25 உடல்கள் இருப்பதாகக் கூறினர். இத் தாக்குதலில் இராணுவத்தினர் 8 பேருக்கு மட்டுமே காயம் ஏற்பட்டது என்றார் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க.

இதேவேளை மட்டக்களப்பு கதிரவெளி கடற்பரப்பில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே கடற்சமர் இடம் பெற்றுள்ளது. இத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் இரண்டு படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாக இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் விடுதலைப்புலிகளின் ஐந்து படகுகள் கடற்படையினரின் படகு மீது தாக்குதல் நடத்தியதாகவும் அதன் பின்னரே கடற்படையினர் அப்படகுகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான மத்திய நிலையம் தெரிவித்தது.

இதில் விடுதலைப்புலிகளின் படகுகள் 2 மூழ்கடிக்கப்பட்டன. ஏனையவை வெருகல் பகுதியை நோக்கிச் சென்றதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.இத் தாக்குதலின் போது கடற்படையினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)




## குடும்பஸ்தர்...

குறித்த குடும்பஸ்தரை கொலை செய்த நபரையும் மர ணவிசாரணையின்போது மனைவி அடையாளம் கண்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவானும் ஊர்காவற்றுறை பதில் நீதிவானுமாகிய இ.த.விக்னராஜா சடலத்தைபிரேதபரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கு மாறு ஊர்கா வற்றுறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச–5)




## புலிகளின் பாதுகாப்புச்...

இராணுவத்தினர் உள் நுழைந் துள்ளனர்.

மாங்கேணி இராணுவ முகாமில் இருந்து 1.5கிலோ மீற்றர் தொலைவில் வடக்குப் பகுதியில் பனிச்சங்கேணி உள்ளது.

வன்முறைகளை நிறுத்தி அமைதிப்பேச்சுக்களை நடத்துமாறு சர்வதேச சமூகம் விடுத்திருக்கும் அழைப்பை புறந்தள்ளும் வகையிலானது இந் நடவடிக்கை.

எல்லையோரப் பகுதிகளில் இராணுவத்தின் வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளை பார்வையிடுமாறு இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் நாம் கேட்டுள்ளோம்.

வட பகுதி மற்றும் முகமாலை மற்றும் கிழக்கில் வாகரை ஆகிய எல்லையோரப் பகுதிகளில் கண்காணிப்புக்குழுவினர் பார்வையிடாத நிலையில் போர் நடவடிக்கைகள் விரிவடையும் அபாயம் உள்ளது.

மேலும் தற்போதைய நிலைமைகள் குறித்து விவாதிக்க தமிழீழ விடுதலைப்புலிகளின் பாதுகாப்புச் சபை கூட்டப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தின் முடிவில் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்படும் என்றார் இ.இளந்திரையன். (ச–5)

## உ.த.பரீட்சை...

இந்து மகளிர் கல்லூரியில் 3 மாணவிகளும், புத்தூர் சிறி சோமஸ் கந்தாவில் இருவரும் '3 ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

*யாழ்.இந்து மகளிர் கல்லூரி உயிரியல் பிரிவு*

நிசாந்தினி சிவாபிரதம் –3ஏ, ஷோபனா மகேந்திரராஜன் 3ஏ

*வர்த்தகப்பிரிவு*

துளசி கந்தசாமி 3ஏ ,கலாவதி துரைராஜா 2ஏ பி, விஜித்தா கணேசன் 2ஏ பி, பிருந்தாயினி தியாகராஜா 2ஏ பி, கோசலாதேவி தர்மலிங்கம் 2ஏ சி ,

*கலைப்பிரிவு*

பிருந்தா முருகதாஸ் 2ஏ பி ,நர்மதா கோபாலச்சந்திரன் 2ஏ பி, காயத்திரி நடனசிகாமணி 2ஏ பி,மிதிலா சேய்மானந்தன் 2ஏ பி, அஜந்தா நாகமுத்து 2ஏ பி, குகன்ஜா ஜெயபாலசிங்கம் 2ஏ பி, கோகுலவாணி லோகநாதன் 2ஏ சி,

*புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி*

*கலைப்பிரிவு*

வி.கமலச்செல்வி 3ஏ ,த.மதுரா 3 ஏ, பொ.ஸ்ரீவர்ணன் 2ஏ பி, ம.வான்தி 2ஏ சி, இ.ரஜீவன் 2ஏ சி, பா.முகுந்தினி 2ஏ சி, த.காருண்யா 2ஏ பி

*உயிரியல்*

இ.கோகுல்நாத் 2ஏ பி

*யாழ்.மானிப்பாய் இந்துக்கல்லூரி*

*கலைப்பிரிவு*

மகேந்திரம் சுதர்சன் 2ஏ பி,

*யாழ்.உடுவில் மகளிர் கல்லூரி*

*கலைப்பிரிவு*

துரைரட்ணம் மேகனா அம்பிகை 3ஏ, உலகரட்சகமணிசாரதாதேவி 3ஏ,தேவராஜா கல்யாணி 3ஏ,இந்திரசிங்கம் சுகன்யா 3ஏ, நடராஜசுந்தரம் மேனகா 3ஏ, நாகேந்திரம் தர்மினி 3ஏ,குணபாலசுப்பிரமணியம் அம்பிகாவதி 3ஏ,

*வேம்படி மகளிர் கல்லூரி*

*கலைப்பிரிவு*

சாமந்தி வேலாயுதம் 3ஏ,மேரி டெல்சியா லோரன்ஸ் 3ஏ

*வர்த்தகப்பிரிவு*

துஷ்யந்தினி நடராஜா 3ஏ

*கணிதப்பிரிவு*

மதுராந்தகா செல்வரத்தினம் 3ஏ, ரேகா திருநாவுக்கரசு 3ஏ, நீதிப்பிரியா தர்மலிங்கம் 3ஏ

*உயிரியல் பிரிவு*

தர்சனா குகதாஸ் 3ஏ,மாலினி பேரம்பலம் 3ஏ

*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி*

*கணிதப்பிரிவு*

ஆ.அஜந்தன் 3ஏ, உ.கனேஸ்வரன் 3ஏ,ச.நந்தரூபன் 3ஏ, சி.சத்தியநாராயணன் 3ஏ,ந.கோகுலன் 3ஏ, சி.ஜயந்தன் 3ஏ,

நா.லக்ஷிகன் 2ஏ பி, பா.நிரஞ்சன் 2 ஏ சி,இ.போல்ரஜீவன் 2ஏ சி, லோ.பிரதீபன் 2ஏ பி, பா.சுபாங்கன் 2ஏ பி, பா.சுதர்சன் 2ஏ பி, சு.மணிவண்ணன் 2ஏ பி, ச.சிவகணேசன் 2ஏ பி,இ.பிரவின் 2ஏ சி, செ.அனோஜன் 2 ஏ சி.

*உயிரியல் பிரிவு*

த.செரூஜனன் 3ஏ, க.தனேசன் 3ஏ, தி.உஷானந் 3ஏ ,ச.தீபன் 3ஏ ,க.மணிதீபன் 2ஏ பி, ந.பிரபு 2ஏ பி, சு.றொஷாந்தன் 2ஏ சி, க.சிறீபவன் 2ஏ பி, ந.அரவிந்தன் 2ஏ பி, த.கபிலன் 2 ஏ பி,

*வர்த்தகப் பிரிவு*

ச.ஜீவிதன் 2 ஏ பி, அ.சிவசொரூபன் 2 ஏ சி.

*கலைப்பிரிவு*

வி.டினேஸ் 2 ஏ சி

*வட்டு.யாழ்ப்பாணக்கல்லூரி*

*கலைப்பிரிவு*

சாரூஜா 3ஏ

*கணிதப்பிரிவு*

மகிந்தகுமார் 3ஏ, துலக்ஷன் 3ஏ

*வர்த்தகப்பிரிவு*

சிவப்பிரகாஷம் 3ஏ (து–133)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.